KINSHIP CARE

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

MALARUM MOTTUKAL

மலர்-1 இதழ்-6

மலரும் மொட்டுக்கள்

பால மந்திரின் நாகர்கோவில் குழந்தைகள் இல்லத்தில் 75 ஆம் ஆண்டு விழா கொண்டாட்டம்:

ஆகஸ்ட் 25: நாகர்கோவிலில் உள்ள குழந்தைகள் இல்லத்தில் 75 ஆம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக நாகர்கோவிலின் மாவட்ட ஆட்சியர் திருமதி. அழகுமீனா, வருவாய் கோட்டாட்சியர் திருமதி எஸ். காளீஸ்வரி மற்றும் இருளப்பபுரம் அரசு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். இல்லத்தின் வரலாறு, உருவாக்கிய உறுப்பினர்கள் குறித்து திரு.தினேஷ் கிருஷ்ணன் பேசினார், இல்லத்தின் முன்னாள் மாணவிகள் விழாவில் கலந்துகொண்டு அவர்களுக்கு இல்லத்தில் கிடைத்த அனுபவத்தை பகிர்ந்துக் கொண்டனர். குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



பால மந்திர் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்வு



ஆகஸ்ட் 31 அன்று சென்னை தி.நகர் நகரில் உள்ள வாணி மஹால் பால மந்திர் பள்ளி ஆண்டு விழாவானது சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக செயிண்ட் கோபைன் இந்தியா நிறுவனத்தின் தலைவர் திரு.பி.சந்தானம் கலந்துக்கொண்டார். இவர் கல்வியின் தரம் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சியை மேம்படுத்துவது குறித்துப் பேசினார். பல்வேறு கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றில் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.


மலரும் மொட்டுக்கள்

BALA MANDIR


கின்ஷிப் கேர் - நிகழ்வுகள் / முகாம்கள்:

பயனாளிகள் நிர்வாகக் குழுவைச் சந்திக்கவும், பால மந்திர் பற்றி அறிந்து கொள்ளவும் ஒரு தளமாக அமையும் வகையில் ஆண்டு தோறும் கின்ஷிப் கேர் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. பயனாளிகளின் தேவைகளைப் புரிந்துகொள்ள இந்த நிகழ்வு உதவுகிறது. இந்த ஆண்டு, பால மந்திரின் 75-வது ஆண்டை மையமாகக் கொண்டு, கின்ஷிப் கேர் நிகழ்வுகள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஆகஸ்ட் 2024 - இல் திருவள்ளூர், சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிகழ்வுகள் நடைபெற்றது.





KNOW YOUR SOCIAL WORKER



திருமதி. சரண்யா

கின்ஷிப் கேர் சென்னை மாவட்டத்தின் சமூகப் பணியாளர்.

திருமதி. சரண்யா ரத்தீஷ் பால மந்திர் கின்ஷிப் கேரில் 2022-இல் சமூகப் பணியாளராக சேர்ந்து, சென்னை மாவட்டத்தின் ஒரு பகுதியை கவனித்துக்கொள்கிறார். பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சமூகத்தில் உள்ள ஏழை குழந்தைகளுக்கு டியூஷன் எடுப்பதில் அவருக்கு அனுபவம் உள்ளது. சமூகப் பணியில் முதுகலைப் பட்டமும்(MSW), கம்ப்யூட்டர் அப்ளிகேஷனில் ஹானர் டிப்ளமோவும் முடித்துள்ளார். தையல், அழகுக்கலை மற்றும் கேட்டரிங் குறித்தச் சான்றிதழ் படிப்பை முடித்துள்ளார். குறிப்பாக குழந்தைகளுடன் இணைந்து பணியாற்றுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

"BE HAPPY WITH WHAT YOU HAVE WHILE WORKING FOR WHAT YOU WANT "

ஆகஸ்ட் 2024 நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் 831 குடும்பங்களும் 1461 குழந்தைகளும் கின்ஷிப் கேர் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். இவர்கள் அனைவரும்பால மந்திரின்

மலரும் மொட்டுக்கள்

கின்ஷிப் கேர் – திருவள்ளூர்:



திருவள்ளூரில் ஆகஸ்ட், 04, 2024 அன்று கின்ஷிப் கேர் முகாம் நடத்தப்பட்டது. இதில், 41 குடும்பங்களைச் சேர்ந்த 81 குழந்தைகள், தங்கள் பெற்றோருடன் பங்கேற்றனர். விழாவிற்கு திருவள்ளூர் குழந்தைகள் நலக் குழு(CWC) தலைவி திருமதிஏ. மேரி .



ஆக்ஸிலியா பால மந்திரின் சேவைகளை பாராட்டினார். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. கே.மலர்விழி மற்றும் ஒருங்கிணைந்த கிராமிய சமூக மேம்பாட்டு சங்கத்தைச் சேர்ந்த திரு.பி.ஸ்டீபன் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

குறிப்பாக, திருமதி.மலர்விழி அவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்ந்ததிலிருந்து கின்ஷிப் கேர் குடும்பங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த பால மந்திர் மேற்கொள்ளும் முயற்சிகளை அவர் பாராட்டினார். அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பெற்றோர்கள் தனிப்பட்ட முறையில் பால மந்திர் நிர்வாகத்துடன் உரையாடி, ஆதரவின் முக்கிய தூணாக இருப்பதற்கு நன்றி தெரிவித்தனர்.



குழந்தைகளுக்கு வேடிக்கையான விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிகழ்ச்சிகளில் குழந்தைகள் மிக மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பங்கேற்றனர். பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கு இது ஒரு பயனுள்ள நாளாக இருந்தது



"ஒரு பெண்ணுக்கு கல்வி புகட்டுவது ஒரு குடும்பத்திற்கே கல்வி தருவதாகும்"

சேலம், நாமக்கல், ஈரோடு நிகழ்ச்சி:

ஆகஸ்ட் 11 அன்று சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்கள் இணைந்து நடத்திய பால மந்தரின் 75 ஆம் ஆண்டு கொண்டாட்ட விழாவானது கோலாகலமாக சேலம் சோனா கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக நாமக்கல் மாவட்டம் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.சதீஷ்குமார் கலந்து கொண்டார். குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பேசி, அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பெற்றோர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார். அரசுப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கான அரசுத் திட்டங்கள் பற்றியும் மேலும் பொதுவானப் பயனுள்ளத் திட்டங்களைப் பற்றி சிறப்புரையாற்றினார்.







கோவை மையத்தின் முதல் முகாம் என்பதால், பெற்றோர்களும் குழந்தைகளும் பால மந்திர் பற்றி அறிய நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் இருந்து 81 குடும்பங்களைச் சேர்ந்த 260 நபர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். பால மந்திர் நிர்வாகத்தை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு பெற்றோர்களுக்கு கிடைத்தது. பால மந்திரைச் சேர்ந்த திருமதி. விஜயலட்சுமி வளரிளம் பருவக் குழந்தைகளின் பெற்றோர்களுடன் வளரிளம் பருவ மாற்றம் குறித்து கலந்துரையாடினார். திரு. பி. நடராஜன் மற்றும் திருமதி விஜி ரமேஷ் ஆகியோர் பயனாளிகளுடன் நேருக்குநேர் கலந்துரையாடினர். இந்த நிகழ்வில் பால மந்திர் வழங்கும் பல்வேறு சேவைகளைப் பற்றி பயனாளிகள் புரிந்துகொண்டனர்.









பொம்மலாட்ட கலை நிகழ்ச்சியை குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கண்டு ரசித்தனர். குழந்தைகள் தங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது மிகவும் வேடிக்கையாக இருந்தது. இந்த நிகழ்வு பெற்றோர்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் நிகழ்வாகவும், குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை வழங்கும் நிகழ்ச்சியாவும் அமைந்தது.

மலரும் மொட்டுக்கள்



கின்ஷிப் கேர் – காஞ்சிபுரம் முகாம்:

காஞ்சிபுரத்தில் கின்ஷிப் கேர் நிகழ்வு ஆகஸ்ட் 18, 2024 அன்று நடைபெற்றது. இதில், 37 குடும்பங்களைச் சேர்ந்த 76 குழந்தைகள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி எம்.எல்.எம் மாமல்லன் மேல்நிலைப் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரு.பெஞ்சமின்அவர்கள் ஒரு புதுமையான பாடலுடன் கூட்டத்தை வரவேற்றார். இது பயனாளிகளுக்கு பால மந்திரை பற்றி மேலும் புரிந்துகொள்ள உதவியது.









பால மந்திரைச் சேர்ந்த திரு.பி.நடராஜன் அவர்கள் 10-ம் வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடினர். அவர் குழந்தைகளை தங்கள் படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவித்தார் மற்றும் அவர்களுடன் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பேசினார். பால மந்திரைச் சேர்ந்த ஆலோசகர் சுஜாதா 3 தொகுதிகள் குழு மற்றும் 4 தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகள் மூலம் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கினார். சமூகத்தின் நலனை உறுதிப்படுத்தும் வகையில் மருத்துவ முகாமானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெற்றோர்கள் நிர்வாகக் குழுவுடன் உரையாடி தங்கள் நன்றியைப் பகிர்ந்து கொண்டனர். கலை மற்றும் குழந்தைகளுக்காக வேடிக்கைவிளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதிரடி பாடல்கள் உட்பட பல பாடல்கள் குழந்தைகளுக்குகற் பிக்கப்பட்டன. குழந்தைகளுக்காக பல கைவினை செயல்பாடுகள் நடத்தப்பட்டன. இது குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஒரு வண்ணமயமான நாளாக அமைந்தது














PARENTS CORNER

ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்குங்கள்:



- பெற்றோர்கள் குழந்தைகளிடம் நிறைய தரமான நேரங்களை செலவிட வேண்டும் (தினமும் குழந்தைகளிடம் அவர்களின் பள்ளி செயல்பாடுகள் மற்றும் அன்றாட நடவடிக்கைகளை கேட்டு அறிந்துகொள்ள வேண்டும் அது மட்டும் இன்றி பெற்றோரும் தங்களின் அனுபவங்களையும் குழந்தைகளிடம் அன்றாட பகிர்ந்துகொள்ள வேண்டும்). இவ்வாறு செய்வதன் மூலம் பெற்றோர்கள் குழந்தைகளின் விருப்பங்களைத் தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல் குழந்தைகள் ஸ்கிரீனில்(தொலைக்காட்சி, செல்போன்) செலவிடும் நேரத்தை குறைக்க முடியும்.

- குழந்தைகள் நிறைய ஓடியாடி விளையாட விடவேண்டும். இவ்வாறு விளையாடுவதன் மூலம் குழந்தைகளின் ஆற்றல் நன்றாக செலவிடப்படுகிறது. எனவே, அவர்கள் நன்றாக சாப்பிடுவார்கள், தூங்குவார்கள். இது குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

தேவையின் அடிப்படையிலான ஆலோசனைகள்:

- வாழ்க்கையில் ஏற்படும் கடினமான சூழ்நிலையை கையாள்வதற்கு சில சமயங்களில் நமக்கு அறிவு சார்ந்த அறிவுரைகளும் உதவிகளும் தேவைப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் நாம் ஒரு ஆலோசகர் இடமிருந்து உதவியை பெறலாம்.

- இது போன்று சூழ்நிலையில் உள்ள பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பால மந்திரின் ஆலோசகர் திருமதி சுஜாதா அவர்கள் உதவி புரிந்து வருகிறார். இதுவரை இவர் 239 பயனாளிகளுக்கு குழு ஆலோசனையும், 33 பயனாளிகளுக்கு தேவையின் அடிப்படையில் தனிப்பட்ட ஆலோசனையும் கொடுத்துள்ளார்.

"EDUCATION ALONE IS NOT ENOUGH; GOOD CHARACTER IS EQUALLY IMPORTANT. PARENTS, YOU MUST TEACH YOUR CHILDREN GOOD VALUES."

மலரும் மொட்டுக்கள்

BALA MANDIR

HAPPY READING



இரு மையங்களிலும் ஹேப்பி ரீடிங்-கில் புதிய வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது, ஹேப்பி ரீடிங்கில் வகுப்புகளில் 322 குழந்தைகள் பங்கேற்றுள்ளனர். குழந்தைகள் மிகுந்த ஈடுபாட்டுடன் வகுப்பில் கலந்து கொள்கிறார்கள். உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து தன்னார்வலர்கள் குழந்தைகளை சிறந்த வாசகர்களாக மாற்ற உதவுகிறார்கள்.

"I DEEPLY REGRET NOT HAVING HAD THE CHANCE TO STUDY. THEREFORE, I WISH FOR EVERYONE TO HAVE ACCESS TO EDUCATION."

செப்டம்பர் மாதத்தில் நடக்க இருக்கும் கின்ஷிப் கேப் நிகழ்வு:

திருவண்ணாமலையில் 15/09/2024, செங்கல்பட்டில் 22/09/2024 அன்றும் கின்ஷிப் கேர் நிகழ்வுகள் நடைபெற உள்ளது. இம்முகாமில் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் அனைவரையும் கின்ஷிப் கேர் சார்பாக வரவேற்கிறோம். இந்த முகாம் பற்றிய சிறப்புகளை அடுத்த செய்திமடலில் காணலாம்.

YOUNG ACHIEVERS





மொனிஷா (காஞ்சிபுரம்) 400 மீட்டர் மாவட்ட அளவிலான ஓட்டப்பந்தயத்தி 1-இடம்.



தேவராஜன் (காஞ்சிபுரம்) ஓவியப்போட்டி.



கௌஷிகா(திருப்பூர்) மாவட்ட அளவிலான ஹாக்கி போட்டியில் முதலிடம்.



"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தழுபுழி உண்டுயிர் வாழ்தர்."

மலரும் மொட்டுக்கள்

BALA MANDIR



YOUNG ACHIEVERS



ரோகிதா (சென்னை) பயிர் கேம்ஸ்.



உமேஷ்(திருவள்ளூர்) கராத்தே போட்டி.



விசாகன் (திருப்பூர்) தேசிய அளவிலான யோகா போட்டி 3-ம் இடம்.



யு.எம். மித்ரன் (சென்னை) குங்பூவில் தங்கப் பதக்கம் பெற்றவர்.



லஷேகாதிருவள்ளூர்) பல் பாஸ்சிங் கேம்.



ஹரிணி (காஞ்சிபுரம்) டைப்ரைட்டிங் - ஆங்கிலம் ஃபர்ஸ்ட் கிளாஸ். ஜூனியர் பேட்மிண்டன் -2 ம் இடம்.



பூர்ணவ் ஷ்ரெஜித் (சென்னை) ஜூனியர் பேட்மிண்டன் -2 ம் இடம்.



கனிஷ்கா (நாமக்கல்) மாவட்ட அளவிலான கால்பந்து போட்டியில் சிறந்த கோல்கீப்பர் பதக்கம் பெற்றார்.

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!